**பதிவு அஞ்சல் ஒப்புகையுடன் நாள்-04.02.2020**
**தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005ன் கீழ் மனு**

COURT FEE INDIA FIVE RUPEES Rs.5
COURT FEE INDIA FIVE RUPEES Rs.5

POWER GRID CORPORATION OF INDIA LTD. ★ SANKAGIRI ★
Inward No. 1021 Date 05/02/2020

**அனுப்புதல்**

**து. இராமச்சந்திரன் (வயது 69)**
த/பெ துரைசாமி ரெட்டி (லேட்),
தொட்டம்பட்டி, கொங்குப்பட்டி அஞ்சல்,
காடையாம்பட்டி வட்டம்,
சேலம் மாவட்டம்– 636 305.

**பெறுதல்**

பொதுத்தகவல் அலுவலர் அவர்கள்,
Office of Power GRID Corporation of India LIMITED,
(A Government of India Enterprise),
TLC Office. No. 3/3/27–B, Bharathi Nagar,
Salem Main Road, SANKAGIRI – 637 301
Salem (Dt).

அய்யா,

**பொருள்:** தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005 Power GRID – Construction of ±800 kV HVDC Raigarh – Pugalur Transmission line (PART –X) உயர்மின் அழுத்தக் கோபுரம் (ம) மின்பாதை அமைத்தல் – நிலபட்டா தாரர்களுக்கு நிலம் மற்றும் மாவகை மரவகைகளுக்கு வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகை குறித்து தகவல் மற்றும் ஆவணங்கள் வழங்க கோருவது தொடர்பாக.

---

மேற்காண் பொருளில் கண்ட உயர்மின் அழுத்தம் கோபும் மின் கம்பிகள் (மின்பாதை) அமைக்க கையகப்படுத்தப்பட்ட நிலம் மற்றும் மரவகைகளுக்கு வழங்கப்பட்ட இழப்பீட்டு தொகையைப்பற்றிய கீழ்கண்ட தகவல்கள் மற்றும் ஆவணங்களை அனுப்பி உதவுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

1. மேற்படி பணிக்காக கையகப்படுத்தப்பட்ட நிலத்திற்கு குறைந்த பட்சம் மற்றும் அதிக பட்சம் சதுர அடி அல்லது சதுர மீட்டருக்கு நிர்ணயித்து வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகை எவ்வளவு என்பதை தெரியப்படுத்த வேண்டுமாய் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.
2. மேற்படி நிலத்தில் இருந்த மரவகைகளுக்கு அதாவது என்ன என்ன மரவகைகளுக்கு குறைந்த பட்சம் மற்றும் அதிக பட்சம் வழங்கப்பட்ட இழப்பீட்டு தொகை பற்றி தெரிவித்திடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

3. எவ்வெவ் வகையான மரங்களுக்கு எவ்வளவு தொகை வழங்கப்பட்டுள்ளது என்ற விவரத்தினை தெரிவித்திடுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேற்கண்ட தகவல்களை தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005ன் கீழ் பெற ரூ.10/–க்கான நீதிமன்ற வில்லை இத்துடன் ஒட்டி அனுப்பியுள்ளேன். மேலும் இத்தகவல் மற்றும் ஆவணங்களை பெற கூடுதல் தொகை ஏதேனும் செலுத்த கோரும் பட்சத்தில் உடன் செலுத்தி பெற்றுக்கொள்ள தயாராக உள்ளேன்.

மேற்கண்ட தகவல்யாவும் தங்களது அதிகார வரம்பிற்கு உட்பட்டதே என்றும் தடைசெய்யப்பட்ட விடயங்களுக்கு உட்பட்டது அல்ல என்றும் தெரிவித்து உரிய கால கெடுவிற்குள் உரிய தகவல் மற்றும் ஆவணங்களை அனுப்பி உதவிடுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள,

D. Ramachandran

(து.இராமச்சந்திரன்) 4/2/2020